**<u>திருவேற்காடு நகராட்சி</u>**
**<u>நகர்மன்ற அவசரக் கூட்டம்</u>**

**2021 ஆம் ஆண்டு பிப்வரரி மாதம் 19ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

**நாள்: 16.02.2021**

---

## <u>பொருள் எண்.1</u>

இந்நகராட்சியில் சிறப்பு சாலை திட்டம் 2020–21ன் கீழ் ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட விபரப்படியான பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் விலைஉறை (Price Bid) திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதின் விபரம் பின்வருமாறு

| வ. எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | பாலாஜி நகர், தினேஷ் நகர், காந்தி தெரு, திருவள்ளூர் தெரு, செந்தில் நகர், மாசிலாமணி தெரு, மயான சாலை, ஐஸ்வர்யா நகர் 1வது பிரதான சாலை, 2வது பிரதான சாலை, 3வது பிரதான சாலை, 1வது தெரு, 2வது தெரு, 3வது தெரு, 4வது தெரு, 6வது தெரு மற்றும் ஜோதி நகர் பகுதிக்கு தார்தளம் புதுப்பித்தல். **(சிப்பம் எண்.1)** | 140.00 | 1. P.சந்திரன்<br>2. M.கார்த்திக் | 4.93 % மதிப்பீட்டை விட அதிகம் (L1)<br>5.13 % மதிப்பீட்டை விட அதிகம் (L2) |
| 2. | கீழ்அயனம்பாக்கம் சேவைச் சாலைக்கு மற்றும் தமிழ் தெருவிற்கு தார்தளம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். கக்கன்ஜி தெரு, கேலக்ஸி பிரதான சாலை, 1வது தெரு மற்றும் குறுக்கு தெருவிற்கு தார்தளம் அமைத்தல். **(சிப்பம் எண்.2)** | 140.00 | 1. M.கார்த்திக்<br>2. B.லோகநாதன்<br>3. ஸ்ரீ செல்லியம்மன் அன் கோ | 2.57 % மதிப்பீட்டை விட குறைவு (L1)<br>2.17 % மதிப்பீட்டை விட குறைவு (L2)<br>10.10 % மதிப்பீட்டை விட அதிகம் (L3) |
| 3. | வி.ஜி.என் மகாலட்சுமி நகர் பிரதான சாலை, 1வது பிரதான சாலை, 4வது பிரதான சாலை, 6வது பிரதான சாலை, 7வது பிரதான சாலை, நந்தகுமார் தெரு, வடநூம்பல் பிள்ளையார் கோயில் தெரு, கேந்திரிய விஹார், ராஜீவ் நகர் வெள்ளாளர் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, எம்.ஜி.ஆர் தெரு, காந்தி தெரு மற்றும் பொன்னியம்மன் கோயில் தெருவிற்கு தார்தளம் புதுப்பித்தல். **(சிப்பம் எண்.3)** | 140.00 | 1. P.சந்திரன்<br>2. ஸ்ரீ செல்லியம்மன் அன் கோ | 4.93 % மதிப்பீட்டை விட அதிகம் (L1)<br>514 % மதிப்பீட்டை விட அதிகம் (L2) |

| வ. எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 4. | ஸ்ரீதேவி நகர் 1வது, 2வது, 3வது மற்றும் 4வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல். **(சிப்பம் எண்.4)** | 140.00 | 1. M/s.ஆரோக்கியநாதன் கண்ஸ்ட்ரக்ஷன்ஸ்<br><br>2. MRN Engineering | 4.72 % மதிப்பீட்டை விட அதிகம் (L1)<br><br>9.81 % மதிப்பீட்டை விட அதிகம் (L2) |
| 5. | மகாலட்சுமி நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் தார்தளம் அமைத்தல், சிவன் கோயில் பிரதான சாலைக்கு தார்தளம் புதுப்பித்தல் மற்றும் காடுவெட்டி மேட்டுப்பாளையம் சாலையினை அகலப்படுத்தி தார்தளம் அமைத்தல். **(சிப்பம் எண்.5)** | 140.00 | 1. U.R.சுப்பிரமணியன்<br><br>2. B.லோகநாதன்<br><br>3. P.சந்திரன் | 0.51 % மதிப்பீட்டை விட குறைவு (L1)<br><br>0.32 % மதிப்பீட்டை விட குறைவு (L2)<br><br>8.04 % மதிப்பீட்டை விட அதிகம் (L3) |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலையை விட சிப்பம் எண்.2 மற்றும் 5 மதிப்பீட்டு விலையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள L1 ஒப்பந்ததாரின் பணியினை ஏற்றும், சிப்பம் எண்.1, 3 மற்றும் 4–க்கான பணியில் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளதால் முறையே L1 ஒப்பந்ததாரருக்கு நகராட்சியின் மூலம் விலை குறைப்பு செய்து தரகோரியதில் ஒப்பந்ததாரர் தற்போதைய கட்டுமான பொருட்களின் சந்தை விலை, இதர விலைவாசி உயர்வு மற்றும் தொழிலாளர்களின் உள்ளூர் தினக்கூலி ஆகியவை அதிகமாக உள்ள காரணத்தால் விலைக்குறைவு செய்து தர இயலாது என கடிதம் வழங்கியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

அ) சிப்பம் எண்.2 மற்றும் 5ல் உள்ள பணிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்படி சிப்பம் எண்.1, 3 மற்றும் 4–க்கான பணி திட்டப்பணியாக உள்ளதாலும், குறிப்பிட்ட காலத்திற்குள் பணியினை முடிக்க வேண்டியுள்ளதாலும், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த L1 ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி எண்.2.7.2.ன்படி நகர்மன்ற அதிகார வரம்பிற்குட்பட்டு மதிப்பீட்டைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஈ) மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டு தொகை விட கூடுதலாகும் செலவினத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1417** **நாள்.19.02.2021**

**தீர்மானம் : அ, ஆ, இ (ம) ஈ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.2

மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் கடித எண்.1926/2018/அ10, நாள்.01.02.2021–ன்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10ல் வேலப்பன்சாவடி பகுதியில் ஆவடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2018–2019 ன் கீழ் பயணியர் நிழற்குடை அமைக்கும்

பணிக்கு ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ள கடிதம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி பணியின் அவசர அவசியத்தினை கருதி தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், பணி உத்தரவு வழங்கி நடடிவக்கை தொடரவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1418** **நாள்.19.02.2021**

**தீர்மானம் : அ, ஆ, இ (ம) ஈ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.3

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்ட மழைநீர் வடிகால்வாய் மற்றும் சாலைப் பணிகளை 2 சிப்பங்களாக ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2020–2021–ன் கீழ் (Phase-II) கூடுதல் பணிகளாக மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.1379 நாள்.25.01.2021–ன்படி நகர்மன்ற ஒப்புதல் பெற்று உரிய நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண். | பணியின் விபரம் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | I | 17 | சக்ரிஷ்வரர் நகர் முதல் கஸ்தூரிபாய் அவென்யூ வரை உள்ள பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் தார்தளம் அமைத்தல். | 0.640 | 4.10 | 124.00 |
| 2. | II | 17 | ராம் நகர் முதல் கஸ்தூரிபாய் அவென்யூ 2வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் தார்தளம் அமைத்தல். | 0.640 | 4.10 | 126.00 |
| | | | **மொத்தம்** | **1.280** | | **250.00** |

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மான்ய நிதி அவர்களின் தலைமையில் 12.02.2021 அன்று நடைபெற்ற திட்ட அனுமதி குழுவில் 2020–21 ஆம் ஆண்டில் 20 % கூடுதல் நிதியினை திருவேற்காடு நகராட்சியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சாலை பணிகளை ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள பொருள் கொண்டுவரப்பட்டு, பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து ஒப்புதல் அளித்து கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது அதன் விபரம் பின்வருமாறு

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மான்ய நி | – | ரூ | 230.00 | இலட்சம் |
| நகராட்சி பங்களிப்பு | – | ரூ | 20.00 | இலட்சம் |
| **மொத்த மதிப்பீடு** | **–** | **ரூ** | **250.00** | இலட்சம் |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விபரத்தினை ஏற்று, நகராட்சி பங்களிப்பினை ஈடு செய்திடவும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் உரிய நிர்வாக அனுமதி பெற கருத்துருவினை மேலனுப்பிட மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1419** **நாள்.19.02.2021**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.4

திருவேற்காடு நகராட்சி 18 வார்டுகளை உள்ளடக்கிய சென்னையை ஒட்டி அமைந்துள்ள தேர்வு நிலை நகராட்சியாகும். 2011 –ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புபடி 62282 ஆகவும் குடியிருப்புகள் எண்ணிக்கை 22291 ஆகவும் உள்ளது. தினசரி இந்நகராட்சியில் 24 மெட்ரிக் டன் குப்பைகள் உருவாகிறது. இதில் 50%

ஈரக்கழிவுகளாக MCC –க்கும் மற்றும் 50% உலர் கழிவுகள் மறுசுழற்சிக்கும் அனுப்பப்படுகிறது. தற்போது 272 துப்புரவு பணியாளர்கள் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் ஈடுப்படுத்தப்பட்டு வீடுகளில் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகள் நகராட்சிக்கு சொந்தமான 22 Battery Operated வாகனம் மூலம் சேகரிக்கப்படுகிறது. மீதமுள்ள 16 Bov வாகனங்கள் அவ்வபோது பழுதுகள் ஏற்பட்டு பணியில் தொய்வு ஏற்படுவதால், பணியில் ஈடுப்படுத்த முடிவில்லை. மேலும், பொது சுகாதார பணிகள் முழுமையாக செயல்படவும், கூடுதலாக **5 Battery Operated Vehicle** வாங்கி வழங்கிட துப்புரவு ஆய்வாளர் 25.01.2021 குறிப்பில் கேட்டுகொண்டுள்ளவாறு வாங்கிக்கொள்ள திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி 5 Bov வாகனங்கள் ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, திடக்கழிவு மேலாண்மை பணிக்காக வாகனங்கள் வாங்குவதற்கான தோராய செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1420** **நாள்.19.02.2021**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.5

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 28.82 மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 7 பசுமை உரகுடில்களில் சேகரம் செய்யப்படுகிறது. மேற்படி பசுமை உரக்குடில்களில் மக்கும் மற்றும் மக்காத என தரம் பிரித்து மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கப்படுகிறது. மக்காத குப்பைகளை தனியார் நிறுவனங்களில் திரவப்பொருளாக பயன்படுத்தப்படுவதால், நகராட்சி பகுதியிலிருந்து நாவலூர் தனியார் நிறுவனங்களுக்கு மக்காத குப்பைகள் எடுத்து செல்வதற்கு ஏற்கெனவே, நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 24.09.2020–ல் கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் **திரு.என்.செல்வராஜ்** என்பவருக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.1275, நாள்.29.10.2020–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது துப்புரவு ஆய்வாளரின் 20.01.2021 –ஆம் தேதிய குறிப்பின்படியும், ஏற்கெனவே வழங்கப்பட்ட ஒப்பந்ததாரின் பணிக்காலம் 13.03.2021 –ம் தேதியுடன் முடிவு பெறும் நிலையில் மேற்படி பணிக்கு ஒதுக்கப்பட்ட நிதி 29.58 இலட்சம் முழுவதும் செலவிடப்பட்டுள்ளது. மேலும், பணியின் அவசர அவசியத்தை கருதி பணிகள் மேற்கொள்ள ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் 13.03.2021 தேதி வரை நகராட்சியில் சேகரிக்கப்படும் குப்பைகள் அகற்றிட தேவைப்படும் கூடுதல் செலவினம் ரூ.29.58 இலட்சத்திற்கும் மற்றும் 14.03.2021 முதல் 13.06.2021 வரை மூன்று மாத காலத்திற்கு **பணி நீட்டிப்பு** செய்தும் இதற்கான செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி கூடுதல் செலவினத்திற்கு பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1421** **நாள்.19.02.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.6

திருவேற்காடு நகராட்சி 18 வார்டுகளை கொண்ட நகராட்சியாகும். இந்நகராட்சி பகுதி 28.50 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். மேலும், இந்நகராட்சி பகுதியில் தினசரி மக்கும் மற்றும் மக்காத தன்மை கொண்ட குப்பைகள் 28.82 மெட்ரிக்டன் அளவு சேகரம்

செய்யப்படுகிறது. தற்போது இந்நகராட்சியின் மக்கள் தொகை சுமார் ஒரு இலட்சம் ஆகும். தற்போது இந்நகராட்சி பகுதியில் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்று நோயினை கட்டுப்படுத்தவும், நகராட்சி பகுதி முழுவதும் அனைத்து வார்டுகளிலும் கிருமி நாசினியை தெளிக்க வேண்டியது அவசியமாகிறது. எனவும் நகராட்சி பகுதியில் மிக விரைவாகவும் அனைத்து பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்கவும் டிராக்டருடன் கூடிய கிருமி நாசினி தெளிக்கும் இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் தற்போது கொரோனா வைரஸ் தாக்கம் குறைந்து வருவதால், மேற்படி டிராக்டர் பயன்பாடு குறைவாக இருப்பதால், டிராக்டர் வாகனத்துடன் **Trailer** இணைத்து துப்புரவு பணிகளுக்கு பயன்படுத்திட ஏதுவாக புதிதாக Trailer ஒன்று வாங்கிடவும் மற்றும் தற்காலிகமாக தனியார் மூலம் நாள் வாடகைக்கு அமர்த்தி பணிகள் மேற்கொள்ளவும், துப்புரவு ஆய்வாளரின் 01.02.2021 தேதிய குறிப்பின்படி கோரியுள்ளதை தொடர்ந்து, பணியின் அவசர அவசியத்தை கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் தற்காலிகமாக 28.02.2021 வரை வாடகை அடிப்படையில் அமர்த்திக்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, **Trailer** வாகனம் ஒன்று புதிதாக கொள்முதல் செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரவும் மற்றும் 28.02.2021 வரை தினசரி வாடகை அடிப்படையில் அமர்த்திக்கொள்ளவும், இதற்கான செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.001073/2021/எச்1)

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனியார் மூலம் தினசரி **Trailer** நாள் வாடகைக்கு அமர்த்தி பணி மேற்கொண்டதையும் மன்றம் பதிவு செய்யவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1422** **நாள்.19.02.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.7

இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக நகராட்சி பகுதிகளில் **பிளிச்சிங் பவுடர் 10 மெட்ரிக் டன் மற்றும் பினாயில் 1000 லிட்டர்** கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் ஆணையர் அவர்களின் தகவலுக்கும் மற்றும் முடிவிற்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | கொள்ளளவு | தொகை |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங்<br>Exportor and Distributors<br>No. 9-5-1.பஜார் தெரு, முதல்மாடி, அய்யம்பாளையம், திண்டுக்கல்.<br>பின்கோடு -624204. | நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்களுக்காக பிளிச்சிங் பவுடர் 10 மெட்ரிக் டன் மற்றும் பினாயில் 1000 லிட்டர் கிருமி நாசினி சப்ளை செய்தல் – பணிக்கு. | பிளிச்சிங் பவுடர்<br>பினாயில் | ரூ.49/-<br>ரூ.127/- |
| 2. | ஸ்ரீ தாய் மூகாம்பிகா எக்ஸ்போர்ட்<br>எண்.4 பூங்கா நகர்,<br>சூலிஸ்வரன்பட்டி,<br>பொள்ளாச்சி- 642006 | | பிளிச்சிங் பவுடர்<br>பினாயில் | ரூ.55/-<br>ரூ.140/- |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான **ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங்** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மற்றும் பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி, கொள்முதல் செய்யவும், செலவினத்திற்கு பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1423** **நாள்.19.02.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் எண்.8

திருவேற்காடு நகராட்சியில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக விழிப்புணர்வு ஏற்படுத்துதல் காய்ச்சல் கணக்கெடுப்பு பணி, மெடிக்கல் கேம்ப், தூய்மை பணிகள் தொற்று நோயினால் பாதிப்பட்டவர்களை கவனித்து கொள்வது அவரது தொடர்பில் உள்ளவர்களை கண்காணிப்பது, மாத்திரைகள் கொடுப்பது, கிருமி நாசினி தெளிப்பதை ஆய்வு செய்வது மேலும், தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கும் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு தேவையானவற்றை வாங்கி வழங்குவது போன்ற பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படி Focus Volunters என்ற பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுத்திட இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரால் 02.02.2021 தேதிய குறிப்பின்படி 11.02.2021 முதல் 10.05.2021 வரை மூன்று மாத காலத்திற்கு பணியாளர்களை வெளிகொணர்வு முறையில் தருவித்திட கோரியுள்ளதை தொடர்ந்து, விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் இதற்கான செலவினம் ரூ.5.50 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.**(ந.க.எண்.001049/2021/எச்1)**

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1424** **நாள்.19.02.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் எண்.9

இந்நகராட்சி பகுதியில் கொரோன வைரஸ் நோய் தொற்று அதிகமாகி வருவதால். பொது மக்களிடைய கொரோனா வைரஸ் நோய் தொற்றின் பரவலை தடுக்க அரசின் வழிகாட்டுதலின்படி அவசியமான நேரங்களில் வெளியில் செல்லும் போது கட்டாயம் முககவசம் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றுதல் காய்ச்சல், சளி, இருமல், மூச்சுத்திணறல் ஆகிய அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி, நிவாரண பெறுதல், போன்ற நோய் தொற்றின் தடுப்பு வாசகங்கள் நகராட்சி பகுதி பொது மக்களிடம் விளம்பரம் செய்ய **மூன்று ஆட்டோவில்** ஒலிபெருக்கி (புனல் குழாய்) அமைத்து, நாள் வாடகை அடிப்படையில் விளம்பரம் செய்வதற்கு இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் 15.07.2021 தேதிய குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டதை தொடர்ந்து 23.10.2020 வரை நகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும், தற்போது நகராட்சி பகுதியில் புதிய கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவுவதாலும், தொற்று நோயினை கட்டுப்படுத்திட பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள துப்புரவு ஆய்வாளரால் 23.10.2020 தேதிய குறிப்பில் மூன்று ஆட்டோக்களில் தொடர்ந்து, பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட பணி நீட்டிப்பு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால், துப்புரவு ஆய்வாளரின் பரிந்துரையினை ஏற்று 30.11.2020 வரையிலான காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் **பணி நீட்டிப்பு** செய்து அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து, பணிகள் மேற்கொண்டமைக்கும் மற்றும் இதற்கான ஆகும் செலவினம் ரூ. 1.50 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1425** **நாள்.19.02.2021**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் எண்.10</u>

இந்நகராட்சி பகுதியில் கொரோன வைரஸ் நோய் தொற்று அதிகமாகி வருவதால். பொது மக்களிடைய கொரோனா வைரஸ் நோய் தொற்றின் பரவலை தடுக்கவும் மற்றும் கட்டுப்படுத்திடவும் பொது மக்களுக்கு எதிர்ப்பு சக்தி அதிகப்படுத்திட கபசுர குடிநீர் காய்ச்சிய 3 மணிநேரத்திற்குள் வழங்கிட வேண்டும். எனவே, இப்பணிக்கு ஒரு ஆட்டோவை பயன்படுத்தி பொது மக்களுக்கு கபசுர குடிநீர் உடனடியாக வழங்கவும். கொரோனா வைரஸ் தாக்கம் தடுத்திடவும், இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரால் 30.09.2020 தேதிய குறிப்பில் ஆட்டோ ஒன்றினை தினசரி நாள் வாடகைக்கு பயன்படுத்திட பரிந்துரை செய்யப்பட்டதை தொடர்ந்து, பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் 1 மாத காலத்திற்கு 31.10.2020 வரை பணி நீட்டிப்பு செய்து அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, பணிகள் மேற்கொண்டமைக்கும் மற்றும் இதற்கான ஆகும் செலவினம் ரூ. 50,000/– வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1426** **நாள்.19.02.2021**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.11</u>

இந்நகராட்சி பகுதியில் கொரோன வைரஸ் நோய் தொற்று அதிகமாகி வருவதால். பொது மக்களிடைய கொரோனா வைரஸ் நோய் தொற்றின் பரவலை தடுக்க அரசின் வழிகாட்டுதலின்படி அவசியமான நேரங்களில் வெளியில் செல்லும் போது கட்டாயம் முககவசம் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றுதல் காய்ச்சல், சளி, இருமல், மூச்சுத்திணறல் ஆகிய அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி, நிவாரண பெறுதல், போன்ற நோய் தொற்றின் தடுப்பு வாசகங்கள் நகராட்சி பகுதி பொது மக்களிடம் விளம்பரம் செய்ய 1 ஆட்டோவில் ஒலிபெருக்கி (புனல் குழாய்) அமைத்து, நாள் வாடகை அடிப்படையில் விளம்பரம் செய்வதற்கு இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் 30.11.2020 தேதிய குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டதை தொடர்ந்து 30.11.2020 வரை நகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும், தற்போது நகராட்சி பகுதியில் புதிய கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவுவதாலும், தொற்று நோயினை கட்டுப்படுத்திட பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள துப்புரவு ஆய்வாளரால் 31.12.2020 தேதிய குறிப்பில் 1 ஆட்டோ தொடர்ந்து, பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட பணி நீட்டிப்பு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால், துப்புரவு ஆய்வாளரின் பரிந்துரையினை ஏற்று 31.12.2020 வரையிலான காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் **பணி நீட்டிப்பு** செய்து அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து, பணிகள் மேற்கொண்டமைக்கும் மற்றும் இதற்கான ஆகும் செலவினம் ரூ. 1.00 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1427** **நாள்.19.02.2021**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.12</u>

இந்நகராட்சி சொந்தமான பொது சுகாதார பிரிவில், பொது சுகாதார பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் **Compactor** வாகனங்களுக்கு வருடாந்திர காப்பீட்டுக் கட்டணம் 2021–2022 ஆண்டுக்கு செலுத்த வேண்டியுள்ளதால் ஒரு வருட காலத்திற்கு காப்பீடு தொகை 1,10,152/– கீழ்க்குறிப்பிட்டுள்ள வாகனங்களுக்கு ஆயுள் காப்பீடு கட்டணம் The New India Assurance Company Limited நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**வாகனங்களின் விவரம்:—**

| **S.No** | **Vehicle No** | **Gross Premium** |
|---|---|---|
| **1.** | TN -12 V-7716 ( Eicher) | 56,728.00 |
| **2.** | TN -12 V-7750( Eicher) | 53,428.00 |
| **Total** | | 1,10,152.00 |

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டமைக்கு மேற்கண்ட செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1428** **நாள்.19.02.2021**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

ஒம்/— தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
திருவேற்காடு நகராட்சி.

/உண்மை நகல்/
ஆணையர்,
திருவேற்காடு நகராட்சி.